**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.106/2023**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாள் திங்கள் கிழமை

அ.சா.16 (பட்டியல் சாட்சி–18) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மனோகரன் | த/பெ.: | தனபால் |
| கிராமம்: | அண்டக்குடி | தாலுக்கா: | நாகப்பட்டிணம் |
| மதம்: | இந்து | தொழில்: | உதவி ஆய்வாளர் (பணி ஓய்வு) |
| வயது: | 63 | முகவரி: | அண்டக்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.11.2025.

**முதல் விசாரணை :–**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த மார்ச் மாதம் 2024–ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 15.02.2022–ல் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.87/2022, ச.பி.174 கு.வி.மு.ச பிரிவின் படி வழக்கு பதிவு செய்து விசாரணையில் இருந்த வழக்கில் கண்ட இறந்து போன சந்தியா என்பவரின் பிரேதத்தின் மீது திருத்துறைப்பூண்டி அரசு பொது மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் வீரையன், பக்கிரிசாமி, சங்கர், மாதவன் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் இவ்வழக்கில் கண்ட புகார்தாரரான மாரிமுத்து என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்னர் சம்பவ இடத்தை பார்வையில் 15.02.2022–ல் இந்த வழக்கின் சம்பவ இடமான பாமணி, பாரதியார் தெரு, மாரிமுத்து வீட்டிற்கு சென்று சாட்சிகள் மாதவன், ரஞ்சித் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.11** ஆகும். பார்வை மகசர் ஏற்கனவே ஆ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எனது விசாரணையில் இறந்து போன சந்தியா என்பவர் எதிரியின் செயலால் தான் இறந்து போனார் என தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவை கு.வி.மு.ச. பிரிவு 174 லிருந்து இ.த.ச பிரிவு 306–ன் கீழ் சட்டப்பிரிவு மாற்றம் குறித்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும். பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

கண்ணுற்ற சாட்சிகளால் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரியும், இறந்து போன சந்தியாவும் ஒருவருக்கொருவர் காதலித்தது சம்பந்தமாக ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி மதிய நேரம், இறந்த சந்தியா வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன். ஆனால் குறிப்பிட்டு எந்த நேரம், எத்தனை மணி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று

சொன்னால் சரிதான். எதிரியும், இறந்து போன சந்தியாவின் தாயாரின் செல்போனிலிருந்து சந்தியாவும் அடிக்கடி தொலைபேசியில் பேசியுள்ளதாக சொல்லியுள்ளேன். அது சம்பந்தமாக ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இறந்து போன சந்தியாவின் வீட்டின் அருகில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் தோராயமாக 50 வீடுகள் இருக்கும். இறந்து போன சந்தியாவின் வீட்டின் அருகில் ஊராட்சிமன்ற தலைவர் அலுவலகம், கோவில், பள்ளிக்கூடம் மற்றும் அதிக மக்கள் நடமாடும் பகுதி என்று சொன்னால் சரிதான். நான் எந்த சாட்சியையும் நேரடியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் அதிக மக்கள் நடமாடும் பகுதி என்றும், எதிரி சம்பவ இடத்திற்கு வந்திருந்தால் அங்குள்ள மக்கள் எதிரியை பிடித்திருப்பார்கள் என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன சந்தியாவின் உடம்பிலிருந்த துப்பட்டாவை கைப்பற்றினேனா என்றால் இல்லை. சந்தியா என்பவர் மருத்துவமனையில் வந்து தான் இறந்து போனார். நான் சந்தியாவை விசாரித்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட பார்வை மகசர், மாதிரி வரைபடம், பிரேத விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டதை அனுசரித்து எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாரிமுத்துவிடம் இறந்து போன சந்தியா என்பவர் பள்ளிக்கு

சென்றுவிட்டு எப்போது திரும்பி வந்தார் என விசாரித்தேனா என்றால் இல்லை. சம்பவ நாளில் சந்தியா என்பவர் பள்ளிக்கு சென்றதாக அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னார்கள். சந்தியா என்ன படித்து வருகிறார் என கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் 10ம் வகுப்பு படித்து வந்ததாக தெரிந்து கொண்டேன். பள்ளியின் வகுப்பு நேரம் எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடியும் என்றால் தெரியாது. நான் சொல்வது போல் எதிரி சம்பவ நாளில் சந்தியா வீட்டிற்கு வரவில்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக எதிரி வந்தார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், தவறான தகவலின் அடிப்படையில் இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை:– இல்லை**</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.